# சங்கமும் டேனிஷ் மாடலும் நம் அனைவரின் உரிமைகளையும் பாதுகாக்கின்றன





என் பெயர் ஜனுஷா லோகெந்திரா (*Janusha Logenthira*), நான் இலங்கையைச் சேர்ந்தவன். 1989 முதல் டென்மார்க்கில் வசித்து வருகிறேன். நான் துணைச் செவியனாக (*nursing assistant*) வேலை செய்து வருகிறேன். நான் *FOA* இல் உறுப்பினர். ஜுட்லாண்டில் (*Jutland*) சிறுபான்மையினர் வலையத்தின் முக்கிய ஒருங்கிணைப்பாளனாகவும் இருக்கிறேன்.

## இலங்கையில் தொழிலாளர் உரிமைகள்

இலங்கையில், வேலை தருபவர்தான் சம்பளத்தை முடிவு செய்வார்.

பணியிடத்தில் காயம்பட்டால் உதவி ஏதும் கிடைக்காது, குடும்பத்தினர்தான் உங்களுக்கு உதவ வேண்டியிருக்கும். குடும்பத்தில் ஒரு மகன் இருந்தால், அவன் எந்த வயதில் இருந்தாலும் சரி, எல்லாவற்றையும் விட்டு விட்டு சம்பாதிக்கப் போயாக வேண்டும்.

லே-ஆஃப் தரப்பட்டால், விதியே என்று வீட்டுக்குப் போக வேண்டியதுதான். உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை - ஏன் லே-ஆஃப் என்று கேட்கவும் முடியாது, காரணமும் சொல்ல மாட்டார்கள்.

# டென்மார்க்கில் நமது உரிமைகள்

டென்மார்க்கில், தொழிலாளர்கள் என்ற வகையில் நமக்கு பல உரிமைகள் உண்டு என்றால் அதற்குக் காரணம் சங்கமும் டேனிஷ் மாடலும் மட்டுமே.

டேனிஷ் உழைப்புச் சந்தை, அதன் தனிச்சிறப்பான அமைப்பாக்கத்திற்காக சிறப்புப் பெற்றது. இங்கே வேலை நிலைமைகள், சம்பளம், உரிமைகள் பற்றி வேலையளிப்பவர்களும் ஊழியர்களும் தாமே முடிவு செய்கிறார்கள்.

ஆக, தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சங்கம், டேனிஷ் உழைப்புச் சந்தையில் முக்கியப் பங்கு வகிக்கிறது, உங்களுக்காக பலவற்றைச் செய்யக்கூடியது. சங்கம்

- நீங்கள் லே-ஆஃப் தரப்பட்டால் உங்களுக்கு உதவுகிறது
- ஊதியம் மற்றும் வேலை நிலைமைகள் பற்றி பேச்சு வார்த்தை நடத்துகிறது, அதை செயல்படுத்த வைக்கிறது
- பணிசார்ந்த விபத்து அல்லது காயம் ஏற்பட்டால் உதவுகிறது.
- உழைப்புச் சந்தையில் உள்ள தொழிலாளர் அனைவரின் உரிமைகளையும் காக்கிறது, உறுதி செய்கிறது

ஆகவே, நீங்கள் ஒரு சங்கத்தில் உறுப்பினராவது முக்கியம்.

நான் செய்ததை நீங்களும் செய்யுங்கள், உங்களுடைய மற்றும் சகாக்களின் உரிமைகளைப் பெற உறுப்பினர் ஆகுங்கள்.

அன்புடன்
ஜனுஷா லோகேந்திரா
(*Janusha Logenthira*)

உங்கள் பணித்துறைக்கேற்ற சங்கம் எது எனக் கண்டறிய, வருகை தாருங்கள் - **www.lo.dk**
காண்க: *Kontakt → LO's medlemmer → Forbund*

SOCIALPÆDAGOGERNE
HK
MFD
BLIK OG RØR
SPILLERFORENINGEN
HÅNDBOLD SPILLER FORENINGEN DANMARK
FOA FAG OG ARBEJDE
DANSK EL-FORBUND
SERVICE FORBUNDET
Dansk Frisør & Kosmetiker Forbund
HKKF
LO
FAGLIGT FÆLLES FORBUND
DANSK JERNBANEFORBUND
Teknisk Landsforbund
fødevareforbundet NNF
DANSK METAL
HK DANMARK

Udgivet af
FIU LIGESTILLING